ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/15 - 2012 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2012.12.18

*1789/15 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 2012, ஒற்றோபர் 04 ஆந் திகதிய 1778/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை 2013.01.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் இவ்வட்டவணையில் தரப்பட்டவாறு இத்தால் திருத்தப்படும் வகையில் கட்டளையை ஆக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, திசெம்பர் 18.*

**அட்டவணை**

*அட்டவணையின் 7 ஆம் விடயத்திற்கு உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலம் :-*

“ 7அ. எவரேனும் ஆளொருவர் மூலம் எல்லை வியாபாரக் கணக்கிற்கு (ஷிலாஸ் கணக்கு) அல்லது மறுதலையாக மேற்கொள்ளப்படும் ஏதேனும் பங்குமாற்றல் சாதனம். ; ”

*1- 382*